**ஹிங்குரக்கொட பிரதேச சபை**
**பொலன்னறுவ மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 02 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுலை 08 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுலை 02 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 பாதகமான அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் பாதகமான அபிப்பிராயத்துக்கான அடிப்படை பகுதியில் கலந்துரையாடிய விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக ஹிங்குரக்கொட பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

### 1.3 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| களஞ்சியப் பண்டங்கள் தொடர்பாக முற்பணக் கணக்கு முறைமை கடைபிடிக்கப் பட்டிருக்கவில்லை. | முற்பணக் கணக்கு முறைமை கடைபிடிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

#### (ஆ) கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) மீளாய்வாண்டு நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்கான நீதிமன்றத் தண்டப்பண வருமானம் மற்றும் மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டண வருமானம் என்பவற்றை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | ஆண்டிற்கான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பவற்றை இனங் கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | ஹிங்குரக்கொட புலதிசி தாரகா மண்டபத்தின் பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான கட்டடமாக இருப்பதனால் பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | பெறுமதியை அறிவிக்குமாறு விண்ணப்பித்துள்ளேன். |
| (iii) | ஊழியர் கடன் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 230,492 இற்கான கடன் மீதியொன்றினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | கடன் மீதியை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (iv) | பெக்கோ லோடர் இயந்திரத்தின் வாடகை வருமான பதிவேட்டின் படி, ரூபா 52,500 இனால் நிலுவை வாடகை வருமானம் குறைவாக காட்டப்பட்டுள்ளது. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (v) | மோட்டர் கிரேடர் இயந்திரத்தின் நிலுவை வாடகை வருமானம் ரூபா 72,000 தொகை நிதிக்கூற்றுக்களுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (vi) | உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்குரிய கடன் வட்டி செலவு ரூபா 3,786,837 தொகை எனினும் நிதிக்கூற்றுக்களில் அவை 3,431,240 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியான செலவு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (vii) | மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு கட்டணத்திற்கான ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட வேண்டும். | அடுத்த வருடம் ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (viii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சொத்துக்களை வாடகைக்கு கொடுத்தலில் (5-23) நிலுவை வருமானம் ரூபா 62,230 தொகை எனினும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 376,715 தொகை என கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன. | சரியான பெறுமதியை கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக் களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணைகளின் படி நிலுவை நீர் விற்பனை வருமானம் ரூபா 334,270 தொகையாக காணப்பட்ட போதிலும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 489,928 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 155,658 இற்கான இணக்கமின்மை ஒன்று காணப்பட்டது. | வித்தியாசங்களை இணக்கஞ் செய்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அட்டவணை தவறவிடப்பட்டுள்ளது. |
| (ii) | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணை மற்றும் ஊழியர் கடன் படிவேட்டிற்கு இடையே ரூபா 509,240 இற்கான இணக்கமின்மை காணப்பட்டது. | வித்தியாசங்களை இணக்கஞ் செய்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். மீதியை குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஊழியர் கடன் மீதி கட்டுப்பாட்டுக் கணக்கின் படி ரூபா 5,002,095 தொகை எனினும் நிதி நிலைமைக் கூற்றின் படி ரூபா 4,846,000 தொகையாக இருந்தமையால் ரூபா 156,095 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | வித்தியாசங்களை இணக்கஞ் செய்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iv) | நிலையான சொத்துக்கள் கணக்கின் பெறுமதி மூலதனச் செலவீட்டிற்கான அரசிறை உதவுத் தொகை கணக்குடன் சமமாக இருக்க வேண்டியிருந்த போதிலும், அந்த இரண்டு கணக்குகள் இடையே ரூபா 77,372,051 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | வித்தியாசங்களை இணக்கஞ் செய்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (v) | மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக் களுடன் சமர்பிக்கப்பட்டிருந்த 2018 ஆண்டிற்கான ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் மற்றும் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் 10 மீதிகளிடையே ரூபா 27,248,683 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டிருந்ததுடன் அவ்வித்தியாசத்திற்கான சான்றுகள் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தனிப்பட்ட மீதிகளிடையே வித்தியாசங்களை இணக்கங் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்துரை வழங்கியிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (vi) நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் பெறவேண்டியவற்றின் பெறுமதி ரூபா 114,113,235 தொகை எனினும் அதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த குறிப்பின் படி அதன் பெறுமதி ரூபா 36,831,560 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 77,281,675 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | வித்தியாசங்களை இணக்கஞ் செய்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். வித்தியாசத்திற்கான காரணத்தினை கண்டறிய நடவடிக்கை எடுப்பேன். |
| (vii) நிதி நிலைமைக் கூற்றின் படி நடைமுறை பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 76,778,466 தொகை எனினும், அதனோடு தொடர்வுடைய குறிப்பின் படி அதன் பெறுமதி ரூபா 92,932,419 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 16,153,953 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | வித்தியாசங்களை இணக்கஞ் செய்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். வித்தியாசத்திற்கான காரணத்தினை கண்டறிய நடவடிக்கை எடுப்பேன். |
| (viii) 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இறுதி மீதிகள் மற்றும் பேரேட்டில் 2019 ஆண்டின் ஆரம்ப மீதிகளிடையே நடைமுறை சொத்துக்களில் ரூபா 4,549,597 தொகை மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களில் ரூபா 8,616,191 தொகையாக ரூபா 13,165,788 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | தனிப்பட்ட மீதிகளிடையே வித்தியாசங்களை இணக்கங் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ix) மீளாய்வாண்டிற்கான நிதி நிலைமைக் கூற்றில் இறுதி மீதிகள் மற்றும் பேரேட்டுக் கணக்கில் இறுதி மீதிகளிடையே நடைமுறை அல்லாத சொத்துக்கள் ரூபா 77,626,033 தொகை, நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 7,214,778 தொகை மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 3,798,097 தொகைகளாக ரூபா 88,638,908 இற்கான இணக்கமின்மை காணப்பட்டது. | தனிப்பட்ட மீதிகளை இணக்கங் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஈ) தொங்கல் கணக்கு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள தொங்கல் கணக்கின் செலவு மீதி ரூபா 773,158 தொகையாகும். | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

(உ) கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ரூபா 472,549,774 தொகைக்கான 06 கணக்கு விடயங்களுக்கு தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக் களில் காட்டப் பட்டுள்ள கணக்கு மீதி களை உறுதிப் படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | விரிவான அட்டவணை, உரிமையை உறுதிப் படுத்தும் கடிதங்கள் கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு பேரேட்டுக் கணக்குகளில் மீதிகளை குறிப்பிடப்படாமையால் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 110,266,667 தொகை, நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 120,370,573 தொகை மற்றும் உரிமைகள் ரூபா 585,960,884 தொகை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ளமுடியாதிருந்தது. | பேரேட்டுக் கணக்குகளை பூரணப்படுத்தி சமப்படுத்த வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

**1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| அவதானிப்புக்கள் | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | | | |
| (i) பிரிவு 126 | விளம்பர அறிவித்தல் கட்டணம் அறவீடு செய்தல் மற்றும் வாராந்த சந்தையை வாடகைக்கு கொடுத்தல் என்பவற்றிற்காக துணை விதிகள் ஆக்கப்பட்டிருக்கவில்லை. | துணை விதிகள் ஆக்கப்பட வேண்டும். | அரச அச்சகத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (ii) பிரிவு 134 | வீதவரி அறவீடு செய்வதற்காக காலத்திற்கு காலம் முன்னேற்றப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டிருக்கவில்லை. | முன்னேற்றப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வரைபுகள் தயாரிக்கப்பட்டு உள்ளுராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஆ) 1946 இன் 30 ஆம் இலக்க வீதவரி மற்றும் வரி பெறுமதி மதிப்பீடு செய்யும் சட்டம் | ஒவ்வொரு 05 வருடங்களுக்கு ஒருமுறை பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வீதவரி அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் 2003 ஆண்டிற்கான பெறுமதி மதிப்பீட்டின் மீது வீதவரி அறவீடு செய்யப்பட்டு வருகின்றது. | சட்டத்தின் பிரகாரம் பெறுமதி மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | திருத்தப்பட்ட பெறுமதி மதிப்பீடு ஆளுனரின் அங்கீகாரத்துக்காக அனுப்பப்பட்டுள்ளது. |
| (இ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| (i) விதி 59 - 63 | அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் கைத்தொழில் மற்றும் வர்த்தக முயற்சிகள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு அட்டவணை ஒன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன், கைத்தொழில் வரி செலுத்தத் தவறுவோரின் பெயர் பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு வியாபார, வர்த்தக மற்றும் கைத்தொழில் அட்டவணை ஒன்று தயாரிக்கப்பட்டு அதன்படி கட்டணம் அறவிடப்பட வேண்டும். | 2020 ற்காக தற்போது பதிவேடு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | விதி 180 மற்றும் 184 | பணம் மற்றும் களஞ்சிய அலுவல்களுக்கு பொறுப்பாக செயற்படும் மற்றும் வருமானம் சேகரிக்கும் கருமங்களில் ஈடுபடும் தற்போது கடமையில் ஈடுபடும் 05 உத்தியோகத்தர்களிடம் மாத்திரம் பிணைப்பணம் பெறப்பட்டிருந்தது. | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களிடம் பிணை அறவீடு செய்யப்பட வேண்டும். | பிணை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br>-------------------------------- | | | |
| (i) | 2015 ஜூலை 14 திகதிய 3/2015 இலக்கங் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் மூலம் திருத்தப் பட்ட நி.பி. 371(5) | ரூபா 202,392 இற்கான முற்பணத் தொகைகள் 11 நாட்கள் முதல் 122 நாட்கள் வரையான காலம் தாமதித்து தீர்க்கப்பட்டிருந்தது. | தாமதம் இன்றி முற்பணம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கால தாமதம் இன்றி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | நி.பி. 396 | வழங்கப்பட்டுள்ள ஆனால் 06 மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்படாத ரூபா 8,145 தொகை பெறுமதியான 09 காசோலைகள் தொடர்பாக நி.பி.யின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். நி.பி.யின் பிரகாரம் செயற்படுவேன். |

**1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 11 பெறவேண்டிய கணக்கு விடயங்கள் தொடர்பான கூட்டுத்தொகை ரூபா 120,198,519 தொகையினை அறவீடு செய்வதற்காக போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்காததுடன், காலப் பகுப்பாய்வு ஒன்று சமர்பித்திருக்கவில்லை. | அறவிடப்படாத மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீண்ட காலமாக காணப்படும் மீதிகள் என்பதால் விரைவாக கண்டிறிந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

(ஆ) செலுத்தவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 76,747,018 தொகை பெறுமதியான 04 செலுத்தவேண்டிய கணக்கு விடயங்களை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திக்காததுடன், காலப் பகுப்பாய்வு சமர்பித்திருக்கவில்லை. | மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீண்ட காலமாக காணப்படும் மீதிகள் என்பதால் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதி முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிஞ்சிய வருமானம் ரூபா 27,579,736 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேர் மாறாக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 5,981,895 தொகையாக காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திரண்ட நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திரண்ட நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 4,916,700 | 4,765,604 | 3,287,313 | 1,489,120 | 4,894,500 | 4,798,892 | 4,327,292 | 3,202,984 |
| வாடகை | 12,426,300 | 12,971,509 | 7,752,987 | 5,218,521 | 11,670,300 | 34,597,270 | 10,355,060 | 11,546,767 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 2,555,000 | - | 2,652,000 | - | 2,755,000 | - | 2,991,261 | - |
| ஏனைய வருமானங்கள் | 23,150,000 | 14,863,174 | 24,496,880 | 22,163,174 | 18,625,000 | 17,742,991 | 31,385,626 | 29,695,423 |
| மொத்தம் | 43,048,000 | 32,600,287 | 38,189,180 | 28,870,815 | 37,944,800 | 57,139,153 | 49,059,239 | 44,445,174 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 1,944,689 தொகையான நிலுவை வீதவரியில் 2019 ஆண்டின் போது ரூபா 767,151 ற்கான தொகை மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன் அது 39 சதவீதமாகக் காணப்பட்டது. | நிலுவை வீதவரியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அறவீடு செய்வதற்காக இறுதி அறிவித்தல் விநியோகிக்கப்படுகின்றது. அழிவடைந்துள்ள அரசாங்க ஆதனங்களின் நிலுவை வீதவரியை பதிவழிப்பதற்காக திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. |

### 2.2.3 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | புதிய வர்த்தக தொடர் கட்டடத்தின் 24 கடையறைகள் தொடர்பாக மீளாய்வாண்டில் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,951,056 இற்கான வாடகைத் தொகையில் பணம் ஏதும் அறவீடு செய்வதற்கு சபைக்கு இயலாதுள்ளதுடன் அந்த நிலுவைத் தொகை ரூபா 627,978 தொகை பெறுமதியான பிணை வைப்பையும் மிகைத்துள்ளமையால் பிணைப் பணத்தின் மூலமும் நிலுவையை மேவகை செய்ய முடியாதுள்ளது. | நிலுவை வாடகையை அறவீடு செய்வதற்கு உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க முடியாத ஆட்களுக்காக சலுகைக் காலவரையறை வழங்குதல் பிணை வைப்பு மிகைத்துள்ள கடையறைகளை சீல் வைத்தல் மேற்கொள்ளப் பட்டுள்ளது. |
| (ஆ) | ஜயந்திபுர உப அலுவலகத்தினால் கடை வாடகை அறவீடு செய்யும் 13 கடையறைகள் தொடர்பாக ரூபா 506,240 இற்கான நிலுவைத் தொகை ஒன்று மீளாய்வாண்டு இறுதியில் காணப்பட்டது. அந்தக் கடைகளில் 08 கடைகள் தொடர்பாக குறிப்பிட்ட காலமொன்றை குறிப்பிடாமல் உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டிருந்ததுடன் மீதியான 05 கடையறைகள் தொடர்பாக உடன்படிக்கை காணப்படாமையால் நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது. | உடன்படிக்கைகளை புதுப்படுத்தி நிலுவைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். சட்ட செயற்பாடுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆண்டு தொடர்பாக பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானத்தை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்காததுடன், 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 14,863,174 தொகையாக காணப்பட்டது. | பெறவேண்டிய வருமானங்களை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு மற்றும் நிலுவைத் தொகையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) துணை விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த 10 துணை விதிகளை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகளை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும். | 2020 பெப்ரவரி 27 திகதி அரச அச்சகத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. |

#### (ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலக்கம் PFB/RED/01/04/2014/01 மற்றும் 2014/02/17 திகதிய நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கையின் பந்தி 04 இன் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்த வேண்டிய விடயங்களை உள்ளடக்கி திட்டம் தயாரித்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | 2020 இற்காக அனைத்தும் உட்படுத்தப்பட்டுள்ளது. |

**(இ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையினால் நீண்ட காலம் முதல் குப்பை அகற்றும் காணியின் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்காததுடன், குப்பை முகாமைத்துவத்திற்காக முறையான வேலைத்திட்டம் ஒன்று தயாரிப்பதற்காக கவனம் செலுத்தியிருக்கவில்லை. | காணியின் உரிமையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், குப்பை முகாமைத்துவத்திற்காக முறையான வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். | உரிமையை தீர்ப்பதற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. உக்கக் கூடிய குப்பைகளை லங்காபுர பிரதேசிய சபையின் கௌசிமா செயற்களத்திற்கு அனுப்பப்படுகின்றது. |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகள் அமைப்பின் மூலம் அறிமுகப்படுத்தியிருந்த நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும், அந்த குறிக்கோள்கள் இடையே சபைக்குரிய குறிக்கோள்களை சரியாக இனங்கண்டிருக் காததுடன், குறிக்கோள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகளுக்காக தரவுகளை சேகரிக்கும் நடைமுறை ஒன்று காணப்படவில்லை. 2017, 2018 மற்றும் 2019 ஆண்டுகளுக்கான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நோக்கி நெருங்குவதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு சபையினால் இனங்காணப்பட்டிருக்கவில்லை. இலக்குகளை நோக்கி நெருங்குவதற்காக நிறுவனத்தின் பதவியணியினரை பயிற்சிவிக்கும் நடைமுறை ஒன்று மற்றும் குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக தொடர்புபடுத்த வேண்டிய ஏனைய அரச நிறுவனங்களை இனங்கண்டிருக்கவில்லை. | சபைக்குரிய குறிக்கோள்களை இனங்காணல், தரவு சேகரிக்கும் நடைமுறை ஒன்றை தயாரித்தல், நிதி ஏற்பாடு மேற்கொள்வதற்காக தொடர்புடைய நிறுவனங்களை இனங்காணல் மேற்கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

## 3.2 மனித வள முகாமைத்துவம்

### ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இரண்டாம் மட்ட 12 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டதுடன், 03 பதவிகளில் மிகை ஒன்று காணப்பட்டது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை திருத்தி மற்றும் நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பதற்கு பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | வெற்றிடமாகக் காணப்படும் அங்கீகரிக்கப்பட்ட கனரக இயந்திர இயக்குனர் பதவிகளுக்காக அமைய அடிப்படையில் இரண்டு உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன், வெற்றிடமாக காணப்பட்ட 04 வெளிக்கள தொழிலாளர் பதவிக்காக அமைய அடிப்படையில் 07 உத்தியோகத்தர்கள் சேர்க்கப் பட்டிருந்தனர். அதே போல் சுகாதார தொழிலாளர் பதவியில் 05 உத்தியோகத்தர்களில் மிகை ஒன்று காணப்பட்ட போதிலும், அமைய அடிப்படையில் 06 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். | வெற்றிடங்களுக்காக நிரந்தர உத்தியோகத்தர்கள் சேர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஊழியர்கள் பற்றாக்குறையாக காணப்பட்டமையால் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக அங்கீகாரத்துக்காக அனுப்பப்பட்டுள்ளது. |

## 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஜயந்திபுர மக்கள் வங்கியில் கணக்கொன்று ஆரம்பிக்காமல் ஜயந்திபுர உப அலுவலகத்தினால் நாளாந்தம் சேகரிக்கப்படும் பணம் இலங்கை வங்கிக் கணக்கொன்றில் செலவு வைத்து பின்னர் தலைமை அலுவலகத்தின் மக்கள் வங்கிக் கணக்கிற்கு மாற்றப்படுவதனால் வழியில் காசு என பெறுமதி ஒன்று வங்கி இணக்கக் கூற்றில் எல்லா மாதங்களும் காட்டுவதற்கு நேரிட்டிருந்தது. | மக்கள் வங்கிக் கிளையில் கணக்கு ஒன்று திறக்கப்பட வேண்டும். | ஜயந்திபுர உப அலுவலகத்தினால் பேணப்படுகின்ற இலங்கை வங்கிக் கணக்கிலுள்ள பணம் மக்கள் வங்கிக் கணக்கு ஒன்றிற்கு மாற்றுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்காக உள்ளகக் கணக்காய்வொன்று செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் இரண்டு மாத்திரம் நடாத்தப்பட்டுள்ளன. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள நடாத்தப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் குழுக் கூட்டங்கள் நடாத்த நடவடிக்கை எடுப்பேன். |

### 4.3 தீர்க்கப்படாத அவதானிப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) ஹிங்குரக்கொட நீதிவான் நீதிமன்ற வளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த சட்டவரைஞர் அலுவலக வளாகம் தொடர்பாக காணி உரித்தாக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 16 கடையறைகளால் அறவிடப்பட வேண்டியிருந்த டென்டர் கட்டணம் ரூபா 3,465,325 தொகை மற்றும் மாதாந்தம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 720,000 ற்கான வாடகைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். தொடர் நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்வேன். |
| (ஆ) லீஸிங் அடிப்படையில் பெற்றிருந்த கப் வண்டி ஒன்று 2015 ஆண்டின் போது விபத்துக்குள்ளானதுடன், காப்புறுதி உரிமை என சபைக்கு கிடைத்திருந்த ரூபா 3,300,000 | முழுமையான நட்டஈட்டை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது லீஸிங் கொடுப்பனவுகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதுடன், வாகனத்தின் உரிமையை பெற்று ஏலவிற்பனை செய்வதற்கும், புதிய வாகனம் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கும் |

| | |
|---|---|
| தொகையொன்று நடைமுறைக் கணக்கில் தொடர்ந்தும் விளைவற்று தடுக்கப்பட்டிருந்தது. வாகனத்தின் மொத்த நட்டஈட்டுத் தொகையாக பெறவேண்டியிருந்த மீதியான ரூபா 3,000,000 தொகையை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடம் பெற்றிருக்கவில்லை. | உரிய ஆவணங்கள் உள்ளூராட்சி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |